**கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை - 2023**

--------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கணக்கு, உரித்து மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் *நியமங்களுக்கு* இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட

மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை.

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.29 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நீண்டகால சொத்துக்கள் மற்றும் ஏனைய முதலீடுகளை கையேற்றல் மற்றும் கைதவிர்த்தல் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 21,745,156 தொகை குறைத்தும் முதலீடு ரூபா 9,073,419 கூடுதலாகவும் வட்டி வருமானம் ரூபா 11,394,314 குறைத்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்கில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 3.30 இன் பிரகாரம் நிதியீட்ட செயற்பாடுகளின் கீழ் கடன் மீளச் செலுத்தல் ரூபா 8,163,272 தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,445,792 ஆன பெறுவனவாக சீராக்கியமை காரணமாக காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 8,163,272 குறைத்தும் காசு உட்பாய்ச்சல் | 2024 இன் கணக்கில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

ரூபா 2,445,792 கூடுதலாகவும் காண்பிக்கப் பட்டிருந்ததுடன் வங்கி மீதி ரூபா 56,934,729 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிளாய்வாண்டின் கட்டிட பெறமானத் தேய்வு ரூபா 144,421 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் இருப்பு உள்ளடக்கப்பட்ட ஏல விற்பனை செய்யப்பட்ட உடைந்த பொருட்கள் இருப்பின் கிரயமான 29,244 ஆண்டின் செலவினமாக பதிவழிப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தது | முன்னைய ஆண்டிக்குரிய கொள்வனவாக இருப்பதால் இவ்வகையில் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டதாக | - மேற்படி - |
| (இ) கடன் வட்டி ரூபா 137,310 தொகை நிதிச் செலவினமொன்றாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நானாவித செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் | - மேற்படி - |
| (ஈ) 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் ரூபா 3,613,696 மீளாய்வாண்டின் வருமானத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தது. | இரண்டு ஆண்டு களுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புக்களாக இருப்பதால் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டதாக | - மேற்படி - |
| (உ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நேரடி அனுப்புகைகளாக சம்பளம் மீள்நிப்பல்களுக்காக கிடைத்த ரூபா 14,056,599 ஆன கடன் தவணைக்காக கிடைத்த ரூபா 20,683 நிலையான வைப்பு வட்டி ரூபா 3,208,767 மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 11,333 ஆன | உரிய பெறுமதியை பட்டியலுடன் சீராக்கி பெறவேண்டியதாக வேண்டியதாக உரிய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2024 ஆம் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் ரூபா 17,297,382 தொகை உரிய கணக்குகளுக்கு சீராக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆண்டின் கணக்கு களுக்கு சீராக்கப்பட்டுள்ளதாக வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | |
| (ஊ) | கட்டிடங்கள் கணக்கிலிருந்து பொருத்திகள் கணக்கெடுக்கும் ஒழுங்குகைகள் கணக்கிற்கும் முறையே வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 90,683 ரூபா ஒன்று 1,155,118 ரூபா 614,468 ஆன மொத்தம் 1,860,269 நானாவித செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு கணக்கின் போது சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயானங்கள் மற்றும் அடக்கஸ்தள கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 128 ஆம் பிரிவு சுற்றறிக்கை | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 05 மயானங்களின் எல்லை தீர்மானிக்கப்பட்டு சபைக்கு கையேற்று வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான மயான காணிகளின் எல்லையை தீர்மானிக்கும் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி அடைந்துள்ளதுடன் பிரதேச சபைக்கு கையேற்பதற்காக பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறித்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் வர்த்தமானியில் வெளியிடும் நடவடிக்கை எடுக்கப்படுமென | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i),(ii) | நி.பி 104(1) (அ)<br>நி.பி 104 (3)<br>நி.பி 104 (4) | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூன் 30 வரை இடம்பெற்ற 42 வாகன விபத்துக்கள் தொடர்பான காரணங்கள் நிச்சயிக்கப்பட்டு பொறுப்பானவர்களுக்கு ஆரம்ப பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு அதற்குரிய நட்டங்கள் சேதங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஜூன் 30 வரை இடம் பெற்றுள்ள மொத்த விபத்துக்கள் எண்ணிக்கை 17 ஆகும். அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 06 விபத்துக்களும் 2022 ஆம் ஆண்டில் 05 விபத்துகளும் 2023 ஆம் ஆண்டு 06 விபத்துக்கள் என்ற வகையிலாகும். இவ்வாறு இடம் பெற்ற அனைத்து சேதங்களுக்காக காப்புறுதி மூலம் நட்டம் மேவுகை செய்யப்பட்டுள்ளதுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற விபத்துகளுக்காக நிதிப் பிரமாணம் 110 படிவத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. 2023 ஆம் ஆண்டில் இடம் பெற்ற | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனைகள் மேற்கொண்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 50 வாகனங்களில் பரிசோதனையொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை . | தற்போது 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுவதாக | சுற்றறிக்கையின் பிரகாசம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,425,256 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,206,396 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச வங்கி ஒன்றில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறை கணக்கிற்குரிய வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் சாதகமான மீதி ரூபா 63,088,827 ஆக இருந்தது எனினும் இந்த நடைமுறை கணக்கில் உள்ள பணத்தை தற்காலிக | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதியையும் மிகையாக உள்ள பணத்தையும் முதலீடு செய்யப்படும் அதை நிலையான வைப்பாக முதலீடு செய்வதற்கு இதுவரை நடவடி தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக | மிகை பணம் இருந்தால் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

குறுங்கால வைப்பாக அல்லது தற்காலிகமாக அல்லது முதலீடு செய்து வட்டி வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 68,757 | 48,736 | 49,212 | 60,684 | 69,331 | 50,221 | 50,087 | 55,201 |
| (ii) | வாடகை | 11,889 | 11,530 | 12,243 | 34,948 | 21,000 | 6,832 | 4,628 | 7,237 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,450 | 600 | 1,149 | - | 1,700 | 1,700 | 1,450 | 250 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,511 | 3,567 | 3,567 | - | 23,481 | 23,481 | 25,200 | - |
| | | 90,607 | 64,433 | 66,171 | 95,632 | 115,512 | 82,234 | 81,365 | 62,688 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதரி மற்றம் வரிகளின் பெறுமதி ரூபா 60,684,236 ஆக இருந்ததுடன் அம்மீதிகளில் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட நிலுவை பெறுமதியுடைய 45 நிலுவை வீதவரி மீதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,743,876 ஆக இருந்தது. அது | நிலுவை மீதிகளில் உள்ள ஆதனங்கள் அனைத்தும் இடப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன் நிலுவை வீதவரி தொகை கொடுப்பனவிற்குரியள நடவடிக்கைகளை | வருடக் கணக்காகாக அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை சேகரித்தல் விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த நிலுவையில் 9.5 சதவீதமாக இருந்தது | மேற்கொள்ளுமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சபையின் பிரதான அலுவலகத்திற்குரிய 146 கடைகளில் இருந்து 99 கடைகளிலிருந்தும் உப அலுவலகத்திற்குரிய 99 கடைகளில் இருந்து 48 கடைகளில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற வேண்டிய மீதி ரூபா 26,953,872 ஆக இருந்தது. ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த கடை வாடகை ரூபா 11,370,780 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,411,341 தொகை முன்னைய ஆண்டிற்குரியதாக இருந்தன. | 2019.10.01 முதல் 2022.12.31 ஆந் திகதி வரை புதிய மதிப்பீட்டு திருத்தத்தின் பேரில் குத்தகையாளரால் வாடகை கொடுப்பனவு தவிர்ப்பு செய்யப்பட்டதால் இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடை வாடகை கொடுப்பனவு தவிர்ப்பு செய்வோரிடமிருந்து கடைகளை மீளக்கையேற்றல் போன்ற மாற்று முறைமை மூலம் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு விரைவுபடுத்த வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 2,600,609 ஆக இருந்ததுடன் ஆண்டில் அதில் ரூபா 769,835 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் | 2019.10.01 முதல் 2022.12.31 ஆந் திகதி வரை புதிய மதிப்பீட்டு திருத்தத்தின் பேரில் குத்தகையாளரால் | நிலுவை கடை வாடகையை அறவிடுவதை விரைவுபடுத்த வேண்டும். |
| | அது 29 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 2,894,040 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 103,135 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது 3.5 சதவீதமாக இருந்தது. | வாடகை கொடுப்பனவு தவிர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஈ) | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா | வழங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் கட்டணங்கள் கிடைத்துள்ளதாக அறிய தருகின்றேன். | பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 7,474,965 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 97,172,883 ஆக இருந்தது. | | வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் குடியிருப்பவர்களால் மீளாய்வாண்டில் ஒவ்வொரு பொருளின் கீழ் 271 முறைப்பாடுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 53 முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபைக்கு கிடைத்திருந்த அனைத்து முறைப்பாடுகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | உரிய காலப்பகுதியில் முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் கழிவு தொகுதியின் கழிவின் மேல் உருவாகும் மீதேன் வாயு உற்பத்தியாகி உருவான தீயை அணைப்பதற்காக Long Arm Excavator இயந்திரத்தை 03 மாதங்களுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியில் இயந்திரம் 620.7 மணித்தியாலங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தி ரூபா 8,534,625 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் வேலை அத்தியட்சகரால் கழிவு பொருள் தொகுதி பரீட்சிக்கப்படும் போது இயந்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட மணித்தியாலங்கள் தொடர்பாக எந்த ஒரு மேற்பார்வையும் மேற்கொள்ளப்படவில்லை. | 03 மாத காலங்களுக்காக வாடகைக்கு அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இயந்திரம் கழிவுப் பொருள் தொகுதியில் வடிகால் வெட்டுதல் மற்றும் மாற்று வழி அமைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டதாகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மேற்பார்வை செய்து பரிந்துரை செய்த பின்னர் வேலை அத்தியட்சகரால் கொடுப்பனவு பரிந்துரைக் கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் | முறையாக பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கும் முறைப்படி கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 25/2014 மற்றும் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் நிரந்தர நியமன வழங்கப்பட்டிருந்த 61 ஊழியர்களும் 29/2019 மற்றும் 2019 செப்டம்பர் 18 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த 29 பேர் உட்பட மொத்தம் 87 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | பதில் வழங்கப்படவில்லை | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் மிகையை அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

4. **பாதீட்டுக் கட்டுப்பாடு**

**4.1**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டிற்காக பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த செயற்பாடுகளை மேற்கொள்ளாமை மற்றும் தேவைப்பாடமையால் 18 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 20,411,636 தொகையும் 02 மூலதன செலவின விடயங்களில் ரூபா 1,499,100 ஆன மொத்த மதிப்பீட்டு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2023 அரச செலவுகளை மட்டுப்படுத்தல் அறிவுறுத்தலின் பேரில் அத்தியவசிய மற்றம் முன்னுரிமை செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொள்ளல் அடிப்படையில் இவ்வாறு மீண்டெழும் மற்றம் மூலதன செலவின விடயங்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றேன் | பாதீட்டினை செயற்திறனான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிஏற்பாடுகளில் ஆகக்கூடிய பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |